<u>வணிகவரித் துறை</u>

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| டாக்டர் க .மணிவாசன், இ.ஆ.ப.,<br>வணிகவரி ஆணையர்,<br>எழிலகம், சேப்பாக்கம்,<br>சென்னை–5. | 1) திரு K. நாகராஜன்.<br>தயாரிப்பாளர்,<br>ரிஷி மூவீஸ்,<br>மார்க்கெட் தெரு,<br>திண்டுக்கல் 624 001<br><br>2) தமிழ் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கம்,<br>பிலிம் சேம்பர் காம்பவுண்ட்,<br>606, அண்ணாசாலை,<br>சென்னை–600 006. |

<u>கடித எண். சட்டக்குழு–4/ 32588/ 2012, நாள் 22.01.2013</u>

அய்யா,

பொருள் : தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – தமிழில் பெயரிடப்பட்ட 'நாடோடி மன்னன்' தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு கோரியது – ஏற்கனவே கேளிக்கை வரி விலக்கு அளிக்கப்பட்ட திரைப்படங்களில் ஏனேனும் மாற்றம் இல்லாத நேர்வில் அத்திரைப்படங்களுக்கு அளிக்கப்பட்ட கேளிக்கை வரி விலக்கு தொடரும் என்பது – தொடர்பாக.

பார்வை:

1 அரசாணை (நிலை) எண்.72, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, நாள் 22.07.2006.

2 அரசாணை (நிலை) எண்.159, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, நாள் 22.08.2007.

3 அரசு கடிதம் எண்.21220/சி1/207–2, நாள் 23.10.2007.

4 அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத் துறை, நாள் 21.07.2011.

5 வணிகவரி ஆணையர் அவர்களின் செயல்முறை கடிதம் எண். சட்டக்குழு–4/ 32588/ 2012, நாள் 27.11.2012. தேர்வுக்குழு எண்.65/2012–13.

6 வணிகவரி ஆணையர் அவர்களின் செயல்முறை கடிதம் எண். சட்டக்குழு–4/ 32589/ 2012, நாள் 27.11.2012. தேர்வுக்குழு எண்.66/2012–13.

7 வணிகவரி ஆணையர் அவர்களின் செயல்முறை கடிதம் எண். சட்டக்குழு–4/ 32587/ 2012, நாள் 28.11.2012. தேர்வுக்குழு எண்.67/2012–13.

8 வணிகவரி ஆணையர் அவர்களின் கடிதம் எண். சட்டக்குழு–4/ 32588/ 2012 (தேர்வுக்குழு எண்.65/2012–13) , நாள் 28.11.2012.

9 வணிகவரி ஆணையர் அவர்களின் கடிதம் எண். சட்டக்குழு–4/ 32589/ 2012 (தேர்வுக்குழு எண்.66/2012–13) , நாள் 29.11.2012.

10 வணிகவரி ஆணையர் அவர்களின் கடிதம் எண். சட்டக்குழு–4/ 32587/ 2012 (தேர்வுக்குழு எண்.67/2012–13) , நாள் 03.12.2012.

11 அரசு கடித எண்.16330/சி1/2012–1, நாள் 10.12.2012.

12 அரசு கடித எண்.16331/சி1/2012–1, நாள் 10.12.2012.

13 அரசு கடித எண்.16479/சி1/2012–1, நாள் 10.12.2012.

---

பார்வையில் காணும் கடிதங்களின் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

பார்வை 5, 6 மற்றும் 7–ல் காணும் வணிகவரி ஆணையர் அவர்களின் கடிதத்தில் 'உலகம் சுற்றும் வாலிபன்', 'அடிமைப்பெண்' மற்றும் 'நாடோடி மன்னன்'என்ற திரைப்படங்களுக்கு தேர்வுக்குழு எண்.65/ 2012–13, 66/2012–13 மற்றும் 67/2012–13 –படி தேர்வுக்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டது. அதன்படி தேர்வுக்குழு உறுப்பினர்களால் 'உலகம் சுற்றும் வாலிபன்', 'அடிமைப்பெண்' மற்றும் 'நாடோடி மன்னன்' என்ற திரைப்படங்கள் A.V.M. ஸ்டுடியோவில் உள்ள A.V.M. A/C திரையரங்கம், ஆற்காடு ரோடு, வடபழனி, சென்னை என்ற திரையரங்கில் 27.11.2012, 28.11.2012 மற்றும் 29.11.2012 மாலை 6.00 மணியளவில் முழுமையாகப் பார்க்கப்பட்டு அதன் அடிப்படையில் திரைப்படங்களை பார்வையிட்ட உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரைகளை பரிசீலனை செய்து அதனடிப்படையில் மேற்கண்ட மூன்று திரைப்படங்களுக்கு கேளிக்கை வரி விலக்கு அளிப்பது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு பார்வை 7, 8 மற்றும் 9–ல் காணும் கடிதங்கள் மூலம் அனுப்பப்பட்டது.

பார்வை 11, 12 மற்றும் 13–ல் காணும் அரசு கடிதங்களில் கீழ்கண்டவாறு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

> "பார்வை ஒன்று மற்றும் இரண்டில் குறிப்பிட்டுள்ள அரசாணைகளின்படி தமிழில் பெயரிடப்பட்ட திரைப்படங்களுக்கு முழுமையான கேளிக்கை வரி விலக்குச் சலுகை பெறுவதற்கு அமைக்கப்பட்ட குழுவினால் 'உலகம் சுற்றும் வாலிபன்', 'அடிமைப்பெண்' மற்றும் 'நாடோடி மன்னன்' திரைப்படத்திற்கு பார்வை மூன்றில் குறிப்பிடப்பட்டுள்ள அரசு கடிதத்தில் கேளிக்கை வரி விலக்கு வழங்க பரிந்துரை செய்யப்பட்டு, கேளிக்கை வரி விலக்கு அளிக்கப்பட்டது.
>
> பார்வை நான்கில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையில் உள்ள வரையறைகள், திரைப்படங்களுக்கு கேளிக்கை வரிவிலக்கு கோரப்பட்டு அப்போதைய நிலையில் நிலுவையில் இருந்த விண்ணப்பங்களுக்கும் அதற்குபின் வரப்பெற்ற விண்ணப்பங்களுக்கும் மட்டுமே பொருந்தும் என ஆணையிடப்பட்டுள்ளது. ஏற்கனவே கேளிக்கை வரி விலக்கு

அளிக்கப்பட்ட திரைப்படங்களில் ஏதேனும் மாற்றம் இல்லாத நேர்வில் அத்தினரப்படங்களுக்கு அளிக்கப்பட்ட கேளிக்கை வரி விலக்கு தொடரும்.

மேற்கண்ட சூழ்நிலையில், 'உலகம் சுற்றும் வாலிபன்', 'அடிமைப்பெண்' மற்றும் 'நாடோடி மன்னன்' திரைப்படங்களுக்கு ஏற்கனவே வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ள நிலையில் மீண்டும் கேளிக்கை வரிவிலக்கு வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை."

மேற்கண்ட அரசுக் கடிதத்தின் அடிப்படையில் இதற்கு முன்னர் கேளிக்கை வரியில் இருந்து முழுமையான விலக்களித்து ஆணை பிறப்பிக்கப்பட்ட தமிழிலேயே பெயர் சூட்டப்பட்ட பழைய, காப்புரிமை பெற்ற மற்றும் புதிய தமிழ் திரைப்படங்களில் மாற்றங்கள் ஏதும் இல்லாத நேர்வில், அத்திரைப்படங்களுக்கு அளிக்கப்பட்ட கேளிக்கை வரி விலக்கு தொடரும் என தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/– டாக்டர் க. மணிவாசன்,
வணிகவரி ஆணையர்

நகல் :
அனைத்து இணை ஆணையர்கள்/துணை ஆணையர்கள்/
வரி விதிப்பு அலுவலர்கள்
இணை ஆணையர் (கணிப்பொறி மையம்)
இத்துடன் இணைக்கப்பட்ட கடிதத்தின் விவரங்களை
இணைய தளத்தில் (Internet & Intranet)
கேளிக்கை வரிகள் என்ற தலைப்பின் கீழ் தனியாக
வெளியிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

23/1/13
வணிகவரி அலுவலர்